# மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள்: ஐக்கிய நாடுகள் நிபுணர் இலங்கைக்கான தனது முதல் விஜயத்தை மேற்கொள்கின்றார்

**ஜெனீவா (யூலை 06, 2017) -** மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் பென் எமர்சன் யூலை மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையில் இலங்கைக்கான ஒரு உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். பயங்கரவாத எதிர்ப்புச் செயல்பாடுகள் தொடர்பான துறையில் எடுக்கப்பட்டு வரும் முன்முயற்சிகள் குறித்த நேரடித் தகவல்களைச் சேகரிப்பதற்கும் அந்தச் செயற்பாடுகள் மனித உரிமைகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் மீது எவ்வாறு தாக்கத்தை எடுத்து வருகின்றன என்பதை மதிப்பீடு செய்வதற்கும் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கிறார்.

‘‘நாட்டின் பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கை மற்றும் சட்டரீதியான சட்டகம் என்பன தொடர்பான கலந்துரையாடலுக்கு உதவுவதற்கும், அதேபோல சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்களின் தயாரிப்பு மற்றும் வரைவு உருவாக்கம் என்பன தொடர்பாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வழிமுறைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு அமைவக இருந்து வருகின்றன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நான் உதவி வழங்குவதற்கு முயற்சிப்பேன்’’ என்கிறார் திரு. எமர்சன்.

இலங்கைக்கான அவரது 5 நாள் விஜயத்தின் போது திரு. எமர்சன் வெளிநாட்டு அலுவல்கள், சட்டம் மற்றும் ஒழுங்கு, தென் பிரதேச அபிவிருத்தி, நீதி, பாதுகாப்பு, நிதி, ஊடகங்கள், சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகாரங்கள் ஆகிய அமைச்சுக்களை உள்ளடக்கிய விதத்தில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் உயர் மட்டச் சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

மேலும், விசேட அறிக்கையாளர் சட்டத்தை அமுல் படுத்தும் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், விசேட பொலிஸ் திணைக்களங்களின் உறுப்பினர்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்வார். அது தவிர பயங்கரவாதக் குற்றச் செயல்கள் தொடர்பாக சந்தேகத்தின் கீழ் தடுப்பிலிருப்பவர்கள் அல்லது குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் நபர்களிடம் நேர்காணலை நடத்துவதற்கென தடுப்புக்காவல் நிலையங்களுக்கும் விஜயம் செய்வார்.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் செய்யும் திரு. எமர்சன் சர்வதேச சமூகப்பிரதிநிகள், சட்டத்தரணிகள், கல்விமான்கள் மற்றும் அரசுசாரா அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவார். அவர் கொழும்புக்கு விஜயம் செய்வதுடன், அநுராதபுரம், வவுனியா ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய விதத்தில் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல தினங்களைச் செலவிடவுள்ளார்.

அவருடைய விஜயத்தின் முடிவின் போது, 2017 யூலை மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 15.00 மணிக்கு திரு. எமர்சன் செய்தியாளர்களின் சந்திப்பொன்றின் போது தனது பூர்வாங்க அவதானிப்புக்களை ஊடகவியலாளர்களுடன் பகிர்ந்து கொள்வார். இந்த ஊடக மாநாடு (கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தை இல. 202 இல் அமைந்திருக்கும்) ஐ நா கட்டிடத்தில் இடம்பெறும். அவருடைய விஜயத்தின் முடிவின் போது வெளியிடப்படும் அறிக்கை மற்றும் செய்தி வெளியீடு ஆங்கிலத்தில் கிடைக்கப்பெறும் என்பதுடன் இதன் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்புக்களை எமது இணையதளத்தில் பார்வையிடலாம் https://lk.one.un.org

செயதியாளர் மாநாட்டுக்கான அனுமதி கண்டிப்பாக ஊடகவியலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

விசேட அறிக்கையாளரின் அறிக்கை ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் 2018 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும்.

முடிவு

***திரு. பென் எமர்சன்*** *(ஐக்கிய இராச்சியம்) பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றைப் மேம்படுத்தி, பாதுகாப்பது தொடர்பான விசேட அறிக்கையாளர் ஆவார். அவர் 2011 ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி இப்பதவியைப் பொறுப்பேற்றதுடன், இப்பதவிக்கான பணிப்பாணை ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னைய மனித உரிமைகளுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2005 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்தது. இப்பணிப்பாணை 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ நா மனித உரிமைகள் பேரவையினால் மூன்றாண்டு காலத்துக்கு புதுப்பிக்கப்பட்டது. 2012 செப்டெம்பர் மாதத்திலும், மீண்டும் 2013 ஆம் ஆண்டு மாரச் மாதத்திலும் இப்பணிப்பாணை புதுப்பிக்கப்பட்டது.*

*விசேட அறிக்கையாளர்கள் என்பவர்கள் மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் என அழைக்கப்படும் அமைப்பின் ஒரு பாகமாக இருந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கட்டமைப்பின் சுயாதீனமான நிபுணர்களைக் கொண்ட மிகப் பெரிய அமைப்பான விசேட நடைமுறைகள், சுயாதீனமாக விடயங்களைக் கண்டறிந்து, கண்காணிக்கும் பேரவையின் பொறிமுறைகளைக் குறிக்கும் ஒரு பொதுப் பெயராக இருந்து வருகின்றது. அது திட்டவட்டமான ஒரு நாடு தொடர்பான நிலைமைகளை அல்லது உலகின் அனைத்துப் பாகங்களிலும் தொனிப்பொருள் அடிப்படையிலான பிரச்சினைகளைக் கவனத்திலெடுத்து வருகின்றது. விசேட நடைமுறைகள் நிபுணர்கள் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊழியர்களாக இருந்து வரவில்லை. தமது பணிக்கென அவர்கள் ஒரு சம்பளத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஏதேனும் அரசாங்கம் மற்றும் அமைப்புக்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் சுயாதீனமானவர்களாக இருந்து வருவதுடன் தனிப்பட்ட பொறுப்பில் செயற்பட்டு வருகின்றார்கள்.*

*பார்க்கவும்*

*UN 2006 Global Counter-Terrorism Strategy*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள், இலங்கை தொடர்பான பக்கம் :* Sri Lanka

*மேலும், தகவல்கள் மற்றும் ஊடக வேண்டுகோள்கள் தொடர்பாகத் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் :*

***கொழும்பில் (விஜயத்தின் போது)*** *: திருமதி யூலியா றோ* (+ 94 (0)11 2580691 ext. 2409 / julia.raue@one.un.org

ஜெனீவாவில் விஜயத்துக்கு (முன்னரும் பின்னரும்) : ***(திரு சறொப் அஸிசோவ்)*** *(+41 22 917 9748 /* sazizov@ohchr.org*) எழுதவும்* srct@ohchr.org

ஐ நாவின் ஏனைய சுயாதீனமான நிபுணர்கள் தொடர்பான ஊடக விசாரணைகள்: சேர்பிய செலாயா, ஐ நா மனித உரிமைகள் ஊடகப் பிரிவு (+ 41 22 917 9383 / xcelaya@ohchr.org)

இந்த ஊடக வெளியீட்டினை நீங்கள் இணையத்தில் பெற்றக்கொள்ள முடியும்

Tag and share - Twitter: @UNHumanRights and Facebook: unitednationshumanrights

Concerned about the world we live in? Then **STAND UP for someone's rights today.** #Standup4humanrights and visit the web page at http://www.standup4humanrights.org